செய்தி வெளியீடு எண்:604 நாள்: 20.12.2016

**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் விவசாயிகளின் இன்னல்களை போக்கிட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயிர்க்கடன் விரைந்து வழங்குதல் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (20.12.2016) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயிர்க்கடன் வழங்குதல் குறித்தும், கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்படும் பிற திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது, இந்திய ரிசர்வ் வங்கி 8.11.2016 அன்று புழக்கத்திலிருந்த 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள், 9.11.2016 முதல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, செல்லத்தக்கவை அல்ல என அறிவிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளை, 30.12.2016 வரை வங்கிக் கணக்குகளில் செலுத்தும் முறை பற்றியும் மேலும் அவற்றை மாற்றிக் கொள்வது குறித்தும் உரிய வழிகாட்டுதல்களை அறிவித்தது.

இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்புகளினால், தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளின் வாடிக்கையாளர்கள் 30.12.2016 வரை செல்லத்தக்கதல்ல என அறிவிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளை அவர்களது கணக்குகளில் செலுத்த அனுமதியிருந்தும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வாடிக்யாளர்களும் மதிப்பிழந்த ரூபாய் நோட்டுகளைச் தங்களது வங்கிக் கணக்கில் செலுத்த இயலவில்லை.

இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்புகளால் பாதிக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பயிர்க்கடன் வழங்கும் பொருட்டும், விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டும், தமிழக விவசாயிகள், எவ்வித சிரமமும் இன்றி அவர்களுடைய விவசாயப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கும், பிற அமைப்புகளிடம் கடன் பெற்று பாதிப்பதை தவிர்ப்பதற்காகவும், **புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் கடந்த 22.11.2016 அன்று ஒரு முன்னோடி திட்டத்தை அறிவித்தார்கள்.

இதற்கேற்ப, விவசாயிகளுக்கு தங்குதடையின்றி பயிர்கடன் வழங்க ஏதுவாக அரசாணை எண். 132, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள்.22.11.2016–ன்படி 23.11.2016 முதல் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2016–17), ரூ.6000 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதில், 15.12.2016 வரை 4,81,148 விவசாயிகளுக்கு ரூ.2704.19 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறிய அரசாணையைப் பின்பற்றி 23.11.2016 முதல் 19.12.2016 வரை மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளில் 1,52,722 விவசாய உறுப்பினர்களுக்கு கணக்குகள் துவங்கப்பட்டு, இதில் 1,04,668 விவசாயிகளுக்கு ரூ.410.15 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 77,752 விவசாயிகளுக்கு ரூ.52.37 கோடி அளவிற்கு ரொக்கமாகப் பணம் செலுத்தாமலேயே விவசாய இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 69,969 விவசாயிகளுக்கு ரூ.5.86 கோடி பயிர்க்காப்பீட்டுத் தொகையினை (Crop Insurance premium) விவசாயிகளின் பயிர்க்கடன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 15.12.2016 வரை 20875 மெ.டன் காய்கறிகள் ரூ.59.23 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான 106 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 293 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.430.25 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 12ம் தேதி வர்தா புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத்துறை சார்ந்த கூட்டுறவு நிறுவனங்கள், கட்டடங்கள், தளவாட சாமான்கள், உரம், பொதுவிநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நியாயவிலைக் கடைகளின் கட்டிடங்கள் சேதம் அடைந்தது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.98.72 இலட்சம் ஆகும். இதில், 40.75 மெ.டன். உரம், தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் ரூ.13.67 இலட்சம் அளவிற்கு சேதமடைந்துள்ளது. கூட்டுறவு நிறுவனங்களின் கட்டடம் மற்றும் இதர தளவாட சாமான்களின் மொத்த சேத மதிப்பு ரூ.85.05 இலட்சம் ஆகும் என்றார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., கூட்டுறவுத்துறை துணைச் செயலாளர் திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் முனைவர் க.இராஜேந்திரன், திரு.ஆர்.கார்த்திகேயன், திரு.எம்.மோகன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.பா.பாலமுருகன், டாக்டர் நா.வில்வசேகரன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**